


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 337 | 30.05.2026 | SATURDAY | VAIKASI : 16 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 337 | 30.05.2026 | சனிக்கிழமை | வைகாசி : 16 | விலை : ரூ.5/-

## தமிழகத்தின் புதிய டிஜிபியாக

# "மகேஷ்குமார் அகர்வால் நியமனம்"

சென்னை: மே.30-

தமிழக காவல் துறையின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக மகேஷ்குமார் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டெல்லியில் எல்லை பாதுகாப்பு படை டிஜிபியாக பணியாற்றி வரும் இவர், இப்போது தமிழக டிஜிபி சந்தீப் ராய் ரத்தோருக்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

யார் இந்த மகேஷ்குமார் அகர்வால்?

மகேஷ்குமார் அகர்வால் 1994ம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி. இவர் சட்டம் பயின்றவர். சொந்த மாநிலம் பஞ்சாப் ஆகும். தந்தையும் வழக்கறிஞர் என்பதால் சட்டம் பயின்று பின்னர் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி 22 வயதில் ஐபிஎஸ் அதிகாரியாகப் பொறுப்பேற்றார்.

தேனி எஸ்.பி., தூத்துக்குடி எஸ்.பி., 2001ல் சென்னை பூக்கடை துணை ஆணையர், சென்னை போக்குவரத்து காவல் தெற்கு துணை ஆணையர் எனப் பொறுப்பு வகித்த மகேஷ்குமார் அகர்வால், பின்னர் சொந்த மாநிலமான பஞ்சாப் மாநிலத்தில் சிபிஐ எஸ்.பி.யாக அயல் பணியில் சென்றார்.



7 ஆண்டுகள் சிபிஐ அதிகாரியாக பஞ்சாப், ஹரியாணா, ஜம்மு காஷ்மீரில் பணியாற்றினார். பின்னர் ஐஜியாகப் பதவி உயர்வுபெற்று தமிழகம் திரும்பிய மகேஷ்குமார் அகர்வால், சிபிசிஐடி ஐஜியாகப் பதவி வகித்தார். பின்னர் மதுரை காவல் ஆணையராகச் சென்றார். மீண்டும் சிபிசிஐடி ஐஜியாகப் பதவி ஏற்றார்.

பின்னர் சென்னை தெற்கு மண்டல கூடுதல் ஆணையராகப் பொறுப்பேற்றார். பின்னர் செயலாக்கப் பிரிவு ஏடிஜிபியாக இருந்த மகேஷ்குமார் அகர்வால், 2020ல் சென்னையின் இளம் காவல் ஆணையராகப் பொறுப்பேற்றவர்.

சிறந்த பணிக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தையும், பொது சேவையில் சிறந்து விளங்கியதற்காக முதல்வர் பதக்கத்தையும் வென்ற இவர் சிபிஐ, சிபிசிஐடி உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளிலும் திறம்பட செயலாற்றியவர் என்பது நினைவுகூரத்தக்கது.

முன்னதாக, தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபியாக இருந்த சங்கர் ஜிவால் கடந்த ஆண்டு ஆக.31 ம் தேதியுடன் ஓய்வு பெற்றார். டிஜிபி பணி ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே, அடுத்து தகுதிவாய்ந்த டிஜிபிக்களின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு (யுபிஎஸ்சி) மாநில அரசு அனுப்பிவைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி செய்யவில்லை.

மகேஷ்குமார் அகர்வால்

மேலும், பணி மூப்பு அடிப்படையில் டிஜிபிக்களான சீமா அகர்வால், ராஜீவ்குமார், சந்தீப்ராய் ரத்தோர் ஆகிய 3 பேரில் ஒருவர் புதிய டிஜிபியாக நியமிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், தமிழக அரசு இந்தப் பட்டியலிலேயே இல்லாத ஜூனியரான வெங்கடராமனை சட்டம் ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாக நியமித்தது.

இதற்கிடையே தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடந்தபோது, சந்தீப் ராய் ரத்தோரை சட்டம் ஒழுங்கு டிஜிபியாக தேர்தல் ஆணையம் நியமித்தது. அதன்பின், தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழலில், தமிழகத்தில் புதிய டிஜிபி நியமனம் தொடர்பாக டெல்லியில் மத்திய பணியாளர் தேர்வாணையம் சமீபத்திய நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலர் சாய்குமார், உள்துறை செயலர் மணிவாசன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில், டிஜிபிக்களான ராஜீவ்குமார் (காவல் உயர் பயிற்சியகம்), சந்தீப் ராய் ரத்தோர், மகேஷ் குமார் அகர்வால் (அயல் பணியாக எல்லை பாதுகாப்பு படைடெல்லி) ஆகிய 3 பேர் பட்டியலுக்கு மத்திய பணியாளர் தேர்வாணையம் ஒப்புதல் வழங்கி அவர்களின் பெயர்களை பரிந்துரைத்தது.

இந்தப் பட்டியல் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவர்களில், மகேஷ்குமார் அகவர்வாலை சட்டம் ஒழுங்கு டிஜிபியாக தமிழக அரசு முறைப்படி இப்போது அறிவித்துள்ளது.

## ஒத்திவைக்கப்படும் தீர்ப்பை 3 மாதங்களுக்குள் வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி: மே.30-

நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும் தாங்கள் ஒத்திவைக்கும் தீர்ப்புகளை மூன்று மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்ய பக்ச்சி ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், 'தீர்ப்புகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் வழக்காடுபவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே, அனைத்து உயர் நீதிமன்றங்களும் தீர்ப்புகளை ஒத்திவைத்த மூன்று மாதங்களுக்குள் அவற்றை வெளியிட வேண்டும்.

தனிநபர் சுதந்திரம் தொடர்பான வழக்குகளில் விரைவான தீர்ப்புகள் தேவை. ஜாமின் மனுக்கள் மீதான உத்தரவுகள் அதே நாளில் வெளியிடப்பட வேண்டும். ஒருவேளை ஒத்திவைக்கப்பட்டால் அடுத்த நாளே வெளியிடப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும். ஜாமீன் அல்லது தண்டனை தொடர்பான உத்தரவுகள் வெளியிட்ட உடனேயே சிறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

விசாரணைக் கைதி அல்லது தண்டனை பெற்றவர் அதே நாளில் அல்லது அதிகபட்சமாக அடுத்த நாளுக்குள் விடுவிக்கப்பட வேண்டும். தீர்ப்பின் முக்கிய பகுதி மட்டுமே வெளியிடப்பட்டால் அதற்கான முழுமையான காரணங்களுடன் கூடிய தீர்ப்பு 15 நாட்களுக்குள் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

தீர்ப்பை ஒத்திவைத்த நான்கு மாதங்களுக்குள் அது வெளியிடப்படாவிட்டால் வழக்காடுபவர்கள் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை அணுகி, அந்த வழக்கை வேறொரு அமர்வுக்கு மாற்றக் கோரலாம்.

காரணங்களுடன் கூடிய முழுமையான தீர்ப்பு நீதிமன்றத்தில் வெளியிடப்படும்போது அந்த தீர்ப்பு 24 மணி நேரத்துக்குள் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

இந்த வழிகாட்டுதல்கள் எந்தவொரு குறிப்பிட்ட நீதிபதி மீதோ, உயர் நீதிமன்றத் தீர்ப்பு மீதோ அவதூறு சுமத்தும் நோக்கம் கொண்டவை அல்ல' என்று உச்ச நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய போட்டிக்கான தேர்வில் பங்கேற்க வினேஷ் போகத்துக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி

புதுடெல்லி: மே.30-

இந்த ஆண்டு நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தேர்வு முகாமில் பங்கேற்க மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்துக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில், அதில் பங்கேற்க இருக்கும் மல்யுத்த வீரர் / வீராங்கனைகளுக்கான தேர்வு முகாம்கள் மே 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன. இதில் கலந்த கொள்ள வினேஷ் போகத் தயாராகி வந்த நிலையில், இரண்டு முக்கிய காரணங்களைச் சுட்டிக்காட்டி இந்திய மல்யுத்த சம்மேளனம் அவருக்கு தடை வித்தது.

இதை எதிர்த்து அவர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இதை கடந்த 18ம் தேதி விசாரித்த தனி நீதிபதி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

தனி நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து வினேஷ் போகத் மேல்முறையீடு செய்தார். இந்த மனுவை கடந்த 22ம் தேதி விசாரித்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கே.உபாத்யாயா மற்றும் நீதிபதி தேஜஸ் காரியா அடங்கிய அமர்வு, வினேஷ் போகத்துக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து இந்திய மல்யுத்த சம்மேளனம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, அலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு, ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தேர்வு முகாமில் பங்கேற்க வினேஷ் போகத்துக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிகள் தங்கள் இடைக்கால உத்தரவில், 'உயர் நீதிமன்றம் ஏற்கெனவே ஓர் உத்தரவை பிறப்பித்துள்ளதால் வினேஷ் போகத்தின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், எங்களால் எதையும் செய்ய இயலாது; நீங்கள் வீட்டுக்கு திரும்பிச் செல்லுங்கள் என்று கூறுவது முறையாக இருக்காது. இதை உங்களிடம் கூறுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

வேறு யாராக இருந்திருந்தாலும் இந்த வழக்கு வேறு ஒரு நிலையில் அணுகப்பட்டிருக்கும். ஆனால், இவர் நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரது வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்த முறை மீது எங்களுக்கு அதிருப்தி உள்ளது. ஆனாலும், விளையாட்டு நிர்வாகம் சார்ந்த விவகாரங்களில் நீதிமன்றங்கள் அடிக்கடி தலையிடுவது, போட்டி அட்டவணைகளைச் சீர்குலைக்கும். மேலும், ஒட்டுமொத்த விளையாட்டுச் சூழலையும் பாதிக்கும்' என தெரிவித்துள்ளனர்.

மனுவை அடுத்த வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்த உச்ச நீதிமன்றம், தனது பங்கேற்பை எதிர்த்து மல்யுத்த சம்மேளனம் தாக்கல் செய்த மனு குறித்து விளக்கம் அளிக்குமாறு வினேஷ் போகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

## கோவை சிறுமி வழக்கில் போலீஸ் விசாரணை நிலவரம் என்ன? : உயர் நீதிமன்றத்தில் அரசு விவரிப்பு

சென்னை: மே.30-

கோவை சூலூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் விரைந்து நீதி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி அளித்துள்ளது.

கோவை மாவட்டம் சூலூரில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய கார்த்திக், மோகன்ராஜ் ஆகியோரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு எதிராக போக்சோ சட்டம் மற்றும் பி.என்.எஸ். சட்டத்தின் கடத்தல், கொலை ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சுதந்திரமான, வெளிப்படையான விசாரணைக்கு காவல் துறை மூத்த அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழு அமைக்க வேண்டும்; இந்தச் சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்கில் பரவிவரும் வீடியோக்கள் புலன் விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுவதால், இந்த



வழக்கு தொடர்பாக செய்திகள் வெளியிட அனைத்து வகையான ஊடகங்களுக்கும் தடை விதிக்க வேண்டும் என கோரி விஷ்வ ஹிந்து பரிஷத் வட தமிழ்நாடு தலைவர் பி.சொக்கலிங்கம் பொது நல மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில், இந்த வழக்கு தொடர்பாக சமூக வலைதளங்கக்களில் பல கருத்துகள் பரப்பப்படுகின்றன. அதனால் வழக்கை சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்கக் கோருவதாக தெரிவிக்கப்பட்டது.

அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, "இந்த வழக்கில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது; மரபணு சோதனை முடிவுகளை எதிர்நோக்கி இருக்கிறோம். இந்த வழக்கை நடத்துவதற்காக காவல் துறை தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞராக சங்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வழக்கில் விரைந்து விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து விரைந்து நீதி கிடைக்க செய்யும்படி அவருக்கு அறிவுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு எதிராக சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது" என தெரிவித்தார்.

மேலும், சமூக வலைதளங்களில் பரவும் வீடியோக்களை நீக்க அமெரிக்காவை சேர்ந்த இன்ஸ்டாகிராம் நிறுவனத்தை கேட்டுள்ளதாகவும், வீடியோக்களை நீக்க குறைந்தபட்சம் 7 நாட்கள் ஆகும் எனவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுப்பது தொடர்பாக விரிவான வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கப்பட உள்ளதாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

அரசு குற்றவியல் மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யன், "இந்த வழக்கின் விசாரணையை கூடுதல் எஸ்.பி. கண்காணித்து வருகிறார். குற்றம்சாட்டப்பட்ட இருவரும் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்" என குறிப்பிட்டார்.

பின்னர் நீதிபதிகள், "விசாரணையை எப்படி நடத்த வேண்டும் என காவல் துறைக்கு எப்படி உத்தரவிட முடியாது. விசாரணை சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த மனு தொடர்பாக விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும்" என கூறி, உத்தரவுக்காக வழக்கைத் தள்ளிவைத்தனர்.

## "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா சி.எம் சார்?" விஜய் மீது உதயநிதி சாடல்

சென்னை: மே.30-

"சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா? நீங்கள் டைம் எடுத்து கற்றுக் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வரை தமிழ்நாடு தாங்காது சி.எம் சார்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "கடலூரில் 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இப்படி தொடர்ச்சியாக நடக்கும் குற்றச் சம்பவங்களை பார்க்கும்போது, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா, இல்லையா என மக்களுக்கு சந்தேகம் வருகிறது.

இந்த சோஃபா மாடல் (Sofa Model) அரசு அமைந்தது முதல், கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை என இப்படி குற்றங்கள் நடக்காத நாளே இல்லை. தேர்தல் பிரச்சாரத்தில் பக்கம் பக்கமாக பேப்பர் வைத்து, சட்டம் ஒழுங்கு பற்றி வாய்கிழிய பஞ்ச் டயலாக் பேசியவர், முதல்வர் ஆனதும் 'டீப் ஸ்லீப் மோடு'க்கு சென்றுவிட்டார்.

பெண்கள் பாதுகாப்புக்காக நீங்கள் அறிவித்த சிங்கப் பெண்கள் படையின் தொடக்க விழாவை, கடைசி நேரத்தில் ரத்து செய்திருக்கிறீர்கள். நிகழ்ச்சியை தள்ளி வைத்துள்ளீர்களா அல்லது அந்த முயற்சியையே தள்ளி வைத்துவிட்டீர்களா என மக்கள் கேட்கிறார்கள்.

சிங்கப்பெண் படை என பெயரையும், சீருடையையும் மாற்றுவதுதான் மாற்றமா? இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா? நீங்கள் டைம் எடுத்து கற்றுக் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வரை தமிழ்நாடு தாங்காது சி.எம் சார்" என்று உதயநிதி கூறியுள்ளார்.

# “காரைக்காலுக்கான காவிரி நீர் பங்கு கிடைக்க உரிய நடவடிக்கை” முதல்வர் ரங்கசாமி உறுதி



புதுச்சேரி, மே.30-
காரைக்காலுக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீர் பங்கு கிடைக்க உரிய நடவடிக்கை எடுப்போம் என முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.புதுச்சேரியில் அமைச்சராக பொறுப்பேற்ற என்.ஆர். காங்கிரஸை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவை சட்டப்பேரவையில் உள்ள அவரது அறை இருக்கையில் முதல்வர் ரங்கசாமி இன்று அமர வைத்தார். அவரது அறையில் இருந்த சாமி படங்களுக்கு தீபம் காட்டி முதல்வர் பூஜை செய்தார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் முதல்வர் ரங்கசாமி கூறியது: “அமைச்சர்கள் இலாகா ஒதுக்காததால் பணிகள் முடங்கியுள்ளதாக கேட்கிறீர்கள். அரசு பணிகள் ஏதும் முடக்கப்படவில்லை. அனைத்து பணிகளும் நடக்கிறது.தினமும் 20 கோப்புகளில் கையெழுத்திட்டு அனுப்புகிறேன். அடுத்த வாரத்தில் அமைச்சர்கள் நியமனம் இருக்கலாம். விரைவில் பேரவைத் தலைவர் யார் என்பது தெரியும்.பேரவைத் தலைவர் தேர்தல், அமைச்சரவை விரிவாக்கம் ஆகியவை உங்களிடம் சொல்லிவிட்டுதான் செய்வேன். நியமன எம்எல்ஏக்களை பாஜக கேட்பதால்தான் இந்த தாமதமா என கேட்கிறீர்கள். அதுபோல் ஏதும் இல்லை. பிரெஞ்சு மொழி பள்ளிகளில் நீடிக்க மத்திய அரசை கேட்டுள்ளேன். மீண்டும் வலியுறுத்துவேன். மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக கேட்கிறீர்கள். காரைக்காலுக்கு உரிய காவிரி நீர் கிடைக்க எப்போதும் புதுச்சேரி அரசு வலியுறுத்தும். காவிரி நீரை கேட்டு பெறுவோம். தமிழக அரசிடமும் கேட்போம். அவர்களும் தருவார்கள். நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீர் உரிய பங்கு கிடைக்க நடவடிக்கை எடுப்போம்” என்றார்.

# சேவையில் முத்திரை பதிக்கும் MPSS!* *உலக பட்டினி தினத்தில் நிறுவனத் தலைவர் ஜே. வினோத்குமார் முன்னிலையில் திரண்ட அறக்கட்டளை நிர்வாகிகள்



திருப்பூர், மே.30-
உலக பட்டினி தினத்தை முன்னிட்டு, "மக்கள் பொதுமனித சமூக சேவை அறக்கட்டளை" (MPSS) சார்பாக ஏழை எளிய பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கும் அன்னதான விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் MPSS ஜே. வினோத்குமார் வழிகாட்டுதலின்படி இந்த நற்பணித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. உலக பட்டினி தினத்தில் பசிப்பிணியை ஒழிக்கும் உயரிய நோக்கில் நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்விற்கு, அறக்கட்டளையின் தலைமைத் தலைவர் எம். முருகானந்தம் தலைமை தாங்கினார். தலைமைத் துணைச் செயலாளர் சக்திவேல், தலைமைப் பொருளாளர் பழனிச்சாமி, மாநில இளைஞர் அணித் தலைவர் சதீஷ்குமார் மற்றும் துணைத் தலைமைத் துணைப் பொருளாளர் முனியப்பன், கிழக்கு மாவட்ட செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்து, ஏழை எளிய மக்களுக்கு மதிய உணவினைத் தங்களது கரங்களால் வழங்கிச் சிறப்பித்தனர். உலக அளவில் பசி மற்றும் பட்டினியால் வாடும் மக்களின் நிலையை உணர்த்தும் உலக பட்டினி தினத்தில், விளம்பர நோக்கங்கள் கடந்து, களத்தில் இறங்கிச் சாமானியர்களின் அடிப்படைத் தேவையான உணவை இன்முகத்தோடு வழங்கிய வினோத்குமார் மற்றும் அவரது குழுவினருக்கு, அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பும் பாராட்டுகளும் குவிந்துள்ளன.

# சாம்சங் செமி கண்டக்டர் பிரிவு ஊழியர்களுக்கு தலா ரூ.3.25 கோடி போனஸ்



புதுடெல்லி, மே.30-
சாம்சங் நிறுவனத்தின் செமி கண்டக்டர் பிரிவானது, தனது சிப் விற்பனை மூலம் 49 மடங்கு கூடுதல் வருவாயை கடந்த காலாண்டில் ஈட்டியுள்ளது. இதன் மூலம் நிறுவன ஊழியர்களுக்கு தலா ரூ.3.25 கோடி போனஸ் வழங்க அந்நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, ஒப்பந்தத்தில் நிறுவன உயர் அதிகாரிகளும், தொழிலாளர் யூனியன் நிர்வாகிகளும் கையெழுத்திட்டு உள்ளனர். முன்னதாக ஊழியர்களுக்கு நியாயமான போனஸை வழங்காவிட்டால், 18 நாள் ஸ்டிரைக் நடத்துவோம் என மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.இதனால் உலக நாடுகளுக்கு சிப் ஏற்றுமதி பாதிக்கும் என்பதால் நிறுவனம் போனஸ் வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த போனஸை வழங்க நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளதால் உலகின் மிகப் பெரிய ஆலைகளில் ஒன்றில் வேலை நிறுத்தப் போராட்டம் நடக்க இருந்தது தடுக்கப்பட்டுள்ளது. சாம்சங் செமி கண்டக்டர் ஆலையிலுள்ள 78 ஆயிரம் ஊழியர்கள் இந்த போனஸை பெறவுள்ளனர். இது ஊழியர்களுக்கு கிடைக்கும் மிகப்பெரிய போனஸ் தொகையாகப் பார்க்கப்படுகிறது. 2026ம் ஆண்டில் நிறுவனத்தின் செயல்பாட்டு லாபத்தைக் கணக்கில் கொண்டு இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது. தென் கொரியாவைச் சேர்ந்த சாம்சங் நிறுவனம், ஸ்மார்ட்போன்கள் முதல் மின்சார வாகனங்கள், சாட்ஜிபிடி போன்ற சேவைகளை இயக்கும் ஏஐ தரவு மைய சர்வர்கள் வரை அனைத்திலும் பயன்படுத்தப்படும் மெமரி சிப்களை தயாரித்து வழங்கி வரும் உலகின் மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்திய மாதங்களில் மெமரி சிப்பற்றாக்குறையின் காரணமாக நிறுவனம் ஏற்கனவே விலையை கடுமையாக உயர்த்தியிருந்தது.

# இந்தியாவில் அறிமுகமாக போகும் ‘பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள்’ ரிசர்வ் வங்கி தீவிர பரிசீலனை



டெல்லி, மே.30-
அதிகரித்து வரும் ரூபாய் நோட்டுகளின் தேவையை சமாளிக்க பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் கொண்டு வரும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி மீண்டும் தீவிரமாக எடுத்து கொண்டு உள்ளது. பாட்னா மற்றும் மும்பையில் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் கடந்த இரண்டு வாரியக் கூட்டங்களில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கி விரைவில் ஒரு முன்னோடித் திட்டத்தை அறிவிக்க கூடும். ஒருபக்கம் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் அதிகரித்து கொண்டே வந்தாலும் கூட, நம் நாட்டில் காகித பணப்புழக்கம் 42.86 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது.
காகித ரூபாய் நோட்டுகளை பாதுகாப்புடன் அச்சிட கடந்த ஆண்டில் மட்டும், 5101.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. அதோடு கடந்த 202425 நிதியாண்டில் (திசீ25) இந்திய ரிசர்வ் வங்கி (RBI) புழக்கத்திலிருந்து நீக்கி, அழித்த அழுக்கடைந்த மற்றும் சேதமடைந்த காகித நோட்டுகளின் எண்ணிக்கை 238 கோடி (23.8 பில்லியன்) பீஸ்கள் ஆகும்.முந்தைய ஆண்டுடன் (திசீ24 21.24 பில்லியன் நோட்டுகள்) ஒப்பிடும்போது, இந்த ஆண்டு அழிக்கப்பட்ட நோட்டுகளின் எண்ணிக்கை 12.3% அதிகரித்துள்ளது. காகித ரூபாய் நோட்டுகளை பராமரிப்பதில் ஏற்படும் இந்த பெரும் சுமையே, பிளாஸ்டிக் (பாலிமர்) நோட்டுகளை நோக்கி ரிசர்வ் வங்கியை சிந்திக்க வைத்துள்ளது.
காகித ரூபாய் நோட்டுகளை விட, பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள் அதிக ஆயுள் (2.5 மடங்கு கூடுதல் ஆயுள்) கொண்டவை மற்றும் குறைவான உற்பத்தி செலவு கொண்டது என்பதால் விரைவில் இதற்கான சோதனை திட்டம் துவங்கும் என்று தகவல்கள் வெளியாகி இருக்கிறது. அன்றாடம் அதிக பயன்பாட்டில் இருக்கும் ரூ.10 மற்றும் ரூ.20 போன்ற குறைந்த மதிப்பு நோட்டுகள் மிக விரைவாகத் தேய்ந்துவிடுவதால், அவை முதலில் சோதனைக்கு உட்படுத்தப்பட வாய்ப்புள்ளது. அதே போல பாலிமர் ரூபாய் நோட்டுகள் 'பிளாஸ்டிக்' என்று குறிப்பிடப்பட்டாலும், கிரெடிட் அல்லது டெபிட் அட்டைகளைப் போல விறைப்பான தன்மை கொண்டவை அல்ல. இவை எடை குறைந்தவை, மடிக்கக்கூடியவை,மேலும் காகித ரூபாய் நோட்டுகளைக் கையாள்வது போலவே இவற்றையும் மிக எளிதாகக் கையாள முடியும் என்கிறார்கள் நிபுணர்கள்



# தொடர் விடுமுறையை முன்னிட்டு கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்

பழநி, மே.30-
விடுமுறை நாட்களை முன்னிட்டு, கொடைக்கானலில் நேற்றுசுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.
பக்ரீத் பண்டிகை விடுமுறை, கோடை விடுமுறையால் கொடைக்கானலில் பிரையண்ட் பூங்கா, பைன் மரக்காடுகள், மோயர் சதுக்கம், தூண் பாறை, ரோஜா பூங்கா, நட்சத்திர ஏரி உள்ளிட்ட சுற்றுலா தலங்களை ஏராளமான சுற்றுலா பயணிகள் சுற்றிப் பார்த்தனர்.ஏராளமான சுற்றுலா வாகனங்களால் ஆங்காங்கே சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நேற்று பகலில் மேகமூட்டம் காணப்பட்டது. பிற்பகல் 1 மணிக்கு மேல் கொடைக்கானல் மேல்மலை, கீழ்மலை பகுதிகளில் அவ்வப்போது விட்டுவிட்டு சாரல் மழை பெய்தது.
தரையிறங்கி வந்த மேகக் கூட்டங்கள், பனிமூட்டத்துக்கு நடுவில் இயற்கை காட்சிகளை மக்கள் கண்டு ரசித்தனர்.

# ரிலையன்ஸ் ரூ.95,754 கோடி லாபம் ஈட்டினாலும் தொடர்ந்து 6வது ஆண்டாக ஊதியம் பெறாத அம்பானி

புதுடெல்லி, மே.30-
மேற்கு ஆசிய போர் காரணமாக, மார்ச் காலாண்டு சற்று மந்தமாக இருந்தது. ஆனாலும், 2025 26 நிதியாண்டில் ரிலையன்ஸ் குழுமம் ரூ.95,754 கோடி லாபத்தையும், ரூ.11.76 லட்சம் கோடி வருவாயையும் ஈட்டியுள்ளது.



ஆனாலும் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி, தொடர்ந்து 6வது ஆண்டாக எவ்வித சம்பளமும் பெறவில்லை. கரோனா பெருந்தொற்று ஏற்பட்டதால், 2020 21 நிதியாண்டில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி தனது ஊதியத்தைத் தானாகவே முன்வந்து துறந்தார்.2021 22, 2022 23, 2023 24, 2024 25 ஆகிய நிதி ஆண்டுகளைத் தொடர்ந்து, கடந்த 2025 26 நிதியாண்டிலும் அவர் இதே முடிவை எடுத்துள்ளார். தன் வசமுள்ள பங்குகளுக்கான ஈவுத் தொகை (டிவிடெண்ட்) மட்டுமே அவரது முக்கிய வருவாயாக உள்ளது. சுமார் ரூ.9.6 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் உலகின் 21வது கோடீஸ்வரராக உள்ளார்.கரோனா தொற்றுக்கு முன்பே கூட, முகேஷ் 2008 09 நிதியாண்டு முதல் தொடர்ந்து 12 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது ஊதியத்தை ரூ.15 கோடி என்ற அளவில் தானாகவே முன்வந்து வரம்புக்குள் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




பணப் பட்டுவாடா, குழந்தைகளைத் தூண்டுதல்

# தேர்தல் ஆணையம், திமுக, அதிமுக, தவெக பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மே.30-
சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்கும்படி பெற்றோரை நிர்பந்திக்க வேண்டும் என குழந்தைகளுக்கு வேண்டுகோள் விடுத்தது, பணப் பட்டுவாடா நடந்துள்ளது ஆகியவை குறித்து விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்கும்படி இந்திய தேர்தல் ஆணையம், தவெக, திமுக, அதிமுக ஆகியவற்றுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.கடலூர் மாவட்டம் புவனகிரியைச் சேர்ந்த வழக்கறிஞர் வாசுகி தாக்கல் செய்த பொது நல மனுவில், நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்ததாக திமுக, அதிமுகவுக்கு எதிராகவும், பெற்றோரை தங்கள் கட்சிக்கு வாக்களிக்கும்படி சிறுவர்களிடம் செல்வாக்கை செலுத்தியதாக தவெக கட்சியினருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகளை பட்டியலிட்டுள்ளார். இது தொடர்பாக திமுக, அதிமுக, தவெக உள்ளிட்ட கட்சிகளுக்கு எதிராக சுதந்திரமான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தார்.இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தவெக தரப்பில் மூத்த வழக்கறிஞர் எஸ்,முரளிதர், “வெறும் செய்தியின் அடிப்படையில் மட்டுமே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் அறிவுக்கப்பட்ட பிறகு தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டுவிடும். தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக தேர்தல் வழக்குதான் தாக்கல் செய்ய முடியும்” என தெரிவித்தார்.திமுக தரப்பில் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, “குழந்தைகளை பிரச்சாரத்தில் பயன்படுத்தியதாக எங்களுக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் இல்லை; ஊழல் நடவடிக்கையை பொறுத்தவரை வெற்றிபெற்ற வேட்பாளரை எதிர்மனுதாரதாக சேர்க்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.அதிமுக தரப்பில் மூத்த வழக்கறிஞர் எஸ்.ஆர்.ராஜகோபாலும் இதே வாதங்களை முன்வைத்தார்.தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன், மனுவுக்கு பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுவுக்கு பதிலளிக்கும்படி திமுக, அதிமுக, தவெக, தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை ஒன்றாம் தேதிக்கு தள்ளிவைத்தனர்

# உள்நாட்டில் தயாரிக்கப்படும் 5ம் தலைமுறை போர் விமானத் திட்டத்துக்கு டாடா, எல்-டி தேர்வு




புதுடெல்லி, மே.30-
விமானப்படை பயன்பாட்டுக்கு ஐந்தாம் தலைமுறையை சேர்ந்த நவீன நடுத்தர ரக போர் விமானத்தை உள்நாட்டில் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தில் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்க விருப்ப கோரிக்கையை பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டது. இதற்கு பல நிறுவனங்கள் விண்ணப்பம் செய்தன. அவற்றில் டாடா, எல் - டி மற்றும் பிஇஎம்எல் நிறுவனத்துடன் இணைந்து பாரத் ஃபோர்ஜ் ஆகிய நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.ஐந்தாம் தலைமுறை போர் விமான திட்டம், இந்தியாவின் மிக லட்சியமான திட்டம் ஆகும். 2030ம் ஆண்டுக்குப்பின் இந்திய விமானப் படையின் போர்த் திறனின் முதுகெலும்பாக 5ம் தலைமுறை போர் விமானம் விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இரண்டு என்ஜின்கள் கொண்ட ரேடாரில் சிக்காத தொழில்நுட்பம் கொண்ட போர் விமானமாக இது தயாரிக்கப்படவுள்ளது. இதில், அதிநவீன சென்சார் ஃபியூஷன், ஆயுதங்கள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவிகள், மற்றும் நெட்வொர்க்சென்ட்ரிக் போர் முறைத் திறன் ஆகியவை இடம்பெறவுள்ளன.
இந்த விமானத்தின் ரூ.16,000 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டத்துக்கு ஆந்திராவின் சத்யசாய் மாவட்டத்தில் ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் கடந்த 15ம் தேதி அடிக்கல் நாட்டினர். இதை இந்தியாவின் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தியாயம் என்று ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். இந்த முயற்சி ஆந்திரப் பிரதேசத்திற்கு ‘ஒரு புதிய யுகத்தை’ கொண்டு வரும் என்று சந்திரபாபு நாயுடு கூறினார்.

# நெல்லை கவின் கொலை வழக்கு: சுர்ஜித் தாயார் கைது9 மாதங்களுக்குப் பிறகு சிபிசிஐடி நடவடிக்கை!





திருநெல்வேலி, மே.30-
நெல்லையை உலுக்கிய கவின் கொலை வழக்கில் 9 மாதங்களுக்குப் பிறகு சுர்ஜித்தின் தாயாரும், சப்இன்ஸ்பெக்டருமான கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீஸார் கைது செய்துள்ளனர்.தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கவின் செல்வகணேஷ் (24) மென்பொருள் பொறியாளராக வேலை பார்த்துவந்த நிலையில் காதல் விவகாரத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 27ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். அவர் காதலித்த பெண்ணின் வீட்டார் தரப்பில் பட்டப்பகலில் இந்தக் கொலை நடந்தது அப்போது பெரும் பரபரப்பாக பேசப்பட்டது.குறிப்பாக கொலையான கவின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். எனவே சாதிய நோக்கத்தோடு இந்தக் கொலை நடைபெற்றதாகவும் கூறப்பட்டது. முதலில் பாளையங்கோட்டை போலீஸார் கொலையை விசாரித்த நிலையில் வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. இதனையடுத்து போலீஸார் பெண்ணின் சகோதரர் சுர்ஜித்தை முதலில் கைது செய்தனர்.பெண்ணின் தந்தை சரவணன் மற்றும் தாய் கிருஷ்ணகுமாரி இருவரும் காவல்துறை உதவி ஆய்வாளர்கள். இந்தநிலையில், விசாரணையில் பெற்றோர்களும் இந்த கொலையில் உடந்தையாக இருந்தது தெரியவந்தது. எனவே முதல்கட்டமாக தந்தை சரவணனை போலீஸார் அதிரடியாக கைது செய்தனர். மேலும் உறவினர் ஜெயபால் என்பவரும் கைது செய்யப்பட்டார்.தாயும் கைது..இந்த கொலை வழக்கில் சுர்ஜித், அவரது தந்தை சரவணன், உறவினர் ஜெயபால் ஆகிய மூவரும் நீதிமன்றக் காவலில் உள்ள நிலையில் வழக்கில் புதிய திருப்பமாக தற்போது சுர்ஜித்தின் தாயாரும், சப்இன்ஸ்பெக்டருமான கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீஸார் இன்று கைது செய்துள்ளனர்.இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த சிபிசிஐடி அதிகாரிகள், சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களின் அடிப்படையில் கிருஷ்ணகுமாரியை கைது செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.
கைது செய்யப்பட்ட அவரை போலீஸார் நெல்லை 2வது கூடுதல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்தச் சம்பவம் நெல்லை பகுதியில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நடிகை ட்விஷா மரணத்தில் ஓய்வு பெற்ற நீதிபதியான மாமியாரை கைது செய்தது சிபிஐ

போபால், மே.30-
தெலுங்கு நடிகை ட்விஷா சர்மா மர்மச்சாவு வழக்கில் அவரது மாமியாரும், ஓய்வு பெற்ற நீதிபதியுமான கிரிபாலா சிங்கை சிபிஐ அதிகாரிகள் நேற்று கைது செய்தனர்.




தெலுங்கு நடிகையான ட்விஷா சர்மா (33) கடந்த மே 12ம் தேதி போபாலில் உள்ள அவரது கணவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பாக வரதட்சணை கொடுமை மற்றும் தற்கொலைக்கு தூண்டியதாக ட்விஷாவின் கணவரும் வழக்கறிஞருமான சமரத் சிங், முன்னாள் மாவட்ட நீதிபதியான ட்விஷாவின் மாமியார் கிரிபாலா சிங் ஆகியோர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.இதற்கிடையில் இந்த வழக்கை மாநில அரசு கையாளும் விதம் குறித்து ட்விஷாவின் பெற்றோர் கூறிய தொடர் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தாமாக முன் வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இதனிடையே தலைமறைவாக இருந்த ட்விஷாவின் கணவர் சமரத் சிங் ஜபல்பூரில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.இந்நிலையில் முன்னாள் நீதிபதியும், ட்விஷாவின் மாமியாருமான கிரிபாலா சிங்கிடம் விசாரணை நடத்த போபாலில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று சிபிஐ அதிகாரிகள் குழு சென்றது. இதைத் தொடர்ந்து அவரிடம் சிபிஐ அதிகாரிகள் நீண்ட நேரம் விசாரணை நடத்தினர். அப்போது சிபிஐ அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கு கிரிபாலா சிங் பதில் அளித்ததாகவும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தந்ததாகவும் சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்தன. விசாரணையின் முடிவில் நேற்று மாலை கிரிபாலா சிங்கை, சிபிஐ அதிகாரிகள் கைது செய்தனர். இதனிடையே, இந்த வழக்கில் கிரி பாலா சிங், முன்ஜாமீன் மனுவைப் பெற்றிருந்தார். இந்நிலையில் கிரி பாலா சிங்கின் முன்ஜாமீன் மனுவை நேற்று முன்தினம் மத்திய பிரதேச உயர் நீதிமன்றம் ரத்து செய்திருந்தது. முன்ஜாமீன் ரத்தான மறுநாளே ஓய்வு பெற்ற நீதிபதி கிரிபாலா சிங் கைது செய்யப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவலில் எடுத்து விசாரிக்க சிபிஐ அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

## “வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாட வேண்டியதில்லை” பினராயி விஜயன்

திருவனந்தபுரம், மே.30-
“வந்தே மாதரம் பாடலை முழுமையாக பாட வேண்டும் என்பதில்லை. அந்தப் பாடலின் இரண்டு சரணங்கள் மட்டும் பாடினால் போதும். அதோடு, அந்தப் பாடல் பாடப்படும்போது எழுந்து நிற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை” என்று பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.கேரளாவின் 16வது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ராஜேந்திர அர்லேகரின் உரையுடன் இன்று தொடங்கியது. ஆளுநர் தனது உரையில், ஐக்கிய ஜனநாயக முன்னணியின் புதிய அரசை பாராட்டிப் பேசினார்.இதையடுத்து, சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வருமான பினராயி விஜயன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், “ஆளுநர் உரையில் மாநிலத்தின் வளர்ச்சிக்கான முக்கிய அம்சங்கள் எதுவும் இடம்பெறவில்லை. மாநிலத்துக்கு



எதிராக மத்திய அரசு கடைப்பிடிக்கும் அணுகுமுறை குறித்தும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கேரளா கோரிப்பெற வேண்டிய பல உரிமைகள் உள்ளன. அவை குறித்து மாநில அரசு மவுனம் சாதித்துள்ளது. மாநிலத்துக்கான மத்திய அரசின் நிதிசார் அணுகுமுறை குறித்தும் ஆளுநர் உரையில் எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை. நிலப் பொருளாதார திட்டம் இங்கு தொடர்ந்து அமல்படுத்தப்படுமா என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்படவில்லை. மாநிலக் கருவூலம் ஒப்படைக்கப்பட்டபோது அதில் ரூ.5,429 கோடி உபரித் தொகை கையிருப்பில் இருந்தது.

வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாட வேண்டிய அவசியம் இல்லை என்பது முன்பே தெளிவுபடுத்தப்பட்டுவிட்டது. வந்தே மாதரம் பாடலின் முதல் இரண்டு சரணங்கள் மட்டும் பாடினால் போதும். அவ்வாறு பாடப்படும்போது எழுந்து நிற்க வேண்டிய கட்டாயம் கூட இல்லை. வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாடவேண்டும் என்பது ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும். பதவியேற்பு விழாவின் போது அப்பாடல் முழுமையாகப் பாடப்பட்டது. அது நடந்திருக்கக்கூடாது. அந்த அனுபவத்துக்குப் பிறகு மாநில அரசு ஒரு கடுமையான முடிவை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதுவே இந்த விவகாரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சரியான நிலைப்பாடு” என தெரிவித்தார்.சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் வீடு உட்பட அவருடன் தொடர்புடைய 10 இடங்களில் அமலாக்கத்துறை நேற்று முன்தினம் (மே 27) சோதனை நடத்தியது. இது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த பினராயி விஜயன், “எனது இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அப்போது நான் வீட்டில்தான் இருந்தேன். ஆனால், யாரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை” என தெரிவித்தார்.முதல்வர் வி.டி. சதீசன் இது குறித்துப் பேசாதது பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, “முதல்வர் ஏன் இதற்கு பதில் அளிக்கவில்லை என்பதை நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும். பாஜக அல்லாத பிற கட்சிகளுக்கு எதிராக பாஜக அரசு எப்போதும் கடுமையான நடவடிக்கைகளையே எடுத்து வருகிறது. அமலாக்கத்துறை காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அக்கட்சி எதிர்வினையாற்றுகிறது. ஆனால், மு.க. ஸ்டாலின், அரவிந்த் கேஜ்ரிவால் போன்ற தலைவர்கள் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையாகக் குரல் கொடுத்துள்ளார்கள். காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு யதார்த்த நிலைக்கு ஏற்றது அல்ல. காங்கிரஸ் தலைமை குறுகிய மனப்பான்மையுடன் கூடிய ஒரு அணுகுமுறையையே கடைப்பிடித்து வருகிறது. வீணாவின் (பினராயி விஜயனின் மகள்) வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது உண்மைதான். ஆனால், செய்திகளில் வெளிவருவது போல அவருக்கு பல வங்கிகளில் கணக்குகள் இல்லை” என்று தெரிவித்தார்.அமலாக்கத்துறை சோதனையைத் தொடர்ந்து வீணாவின் 242 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ள நிலையில், பினராயி விஜயன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு: தவெக அரசு மீது டிடிவி.தினகரன் குற்றச்சாட்டு

ராமநாதபுரம், மே.30-
தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதுடன், பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களும் அதிகரித்து ள்ளதாக அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்தார். ராமநாதபுரத்தில் அமமுக பிரமுகரின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்து 2 வாரங்களில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றச்செயல், ரவுடியிசம் அதிகரித்து வருகிறது. மாற்றம் வேண்டும் என மக்கள் தவறான முடிவெடுத்து விட்டனர் என்பதை இன்னும் 6 மாதங்களில் மக்கள் உணர்ந்து கொள்வர். ஆசை வார்த்தை கூறி... அதிமுக எம்எல்ஏ.க்களுக்கு தவெக குதிரை பேரம் நடத்தி அமைச்சர் பதவி வழங்குவதாக ஆசைவார்த்தை கூறியதால், அதிமுகவில் இருந்து சிலர் பிரிந்து சென்று ஆதரவளித்தனர். ஆனால் தவெக பொய்யான வாக்குறுதி அளித்ததை அறிந்த பலரும் மீண்டும்



பழனிசாமி தலைமையிலான அதிமுகவில் இணைந்து வருகின்றனர். ஜெயலலிதாவின் உண்மைத்தொண்டர்கள் அனைவரும் விரைவில் ஓர் அணியில் இணைவார்கள். தவெகவில் இணைந்த வெல்லமண்டி நடராஜன் உள்ளிட்ட உண்மையான விசுவாசிகளும் விரைவில் அதிமுகவில் இணைவார்கள். திமுக கூட்டணியில் வெற்றி பெற்றவர்கள் தவெகவுக்கு ஆதரவு அளித்து, அமைச்சரவையில் சேர்ந்துவிட்டு, குடியரசு தலைவர் ஆட்சி வராமல் தடுப்பதற்காக ஆதரவு அளித்ததாகக் கூறுவது அவர்களுக்கு சரியாக இருக்கலாம். அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. அவருக்கு ஆதரவு அளித்த அதிமுக எம்எல்ஏக்களை விஜய் நடுத்தெருவில் விட்டுள்ளார். குறுக்கு வழியில் திராவிட கட்சிகளை முதல்வர் விஜய் அழிக்கப் பார்க்கிறார். மின்சார பிரச்சினை உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளை அவர் சரியாக கையாளவில்லை. ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதல்வர் டெல்லியில் பிரதமரை சந்தித்த பின்பு செய்தியாளர்களை சந்தித்து பிரதமருடன் நடைபெற்ற உரையாடல் குறித்து விளக்குவது வழக்கமானது. ஆனால் விஜய் இதுவரை செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்

## கோடை வெப்ப நோய்களுக்கு சிகிச்சை அளிக்க சென்னையில் தயார் நிலையில் 360 சுகாதார நிலையங்கள்

சென்னை, மே.30-
கோடை வெப்பத்தால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க சென்னை மாநகராட்சி சார்பில் 360 சுகாதார நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதாக மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கோடைவெப்பம் அதிகரித்து வருகிறது. கோடை வெயிலால் அதிக வியர்வை வெளியேறும் போது உடலில் உப்புச்சத்து மற்றும் நீர்ச்சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல்சோர்வு, தலைசுற்றல், தசைப்பிடிப்பு, குறைந்த அளவு சிறுநீர் வெளியேற்றம், மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். பச்சிளம் குழந்தைகள், சிறுவயது குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியவர்கள் அதிகளவில் பாதிப்படைய வாய்ப்புள்ளது.அதிக அளவில்



மோர், உப்பு மற்றும் மோர் கலந்த அரிசிக்கஞ்சி, இளநீர், உப்பு கலந்த எலுமிச்சை பழச்சாறு மற்றும் ஓஆர்எஸ் உப்புக் கரைசல் ஆகியவற்றை பருக வேண்டும்.

வெளியே செல்லும்போது, திறந்தவெளியில் வேலை செய்யும்போது தலையில் பருத்தி துணி, துண்டு, தொப்பி அணிந்து கொள்ள வேண்டும். தேவையில்லாமல் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.தீவிர மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடி வயிற்றில் வலி ஏற்பட்டால் மருத்துவ உதவியை நாடவேண்டும். நாடித்துடிப்பு, இதயத்துடிப்பு, சுவாசம் ஆகியவற்றை பரிசோதிக்க வேண்டும்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 200 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புற சமூக நல மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகள், தொற்று நோய் மருத்துவமனை என மொத்தம் 360 சுகாதார நிலையங்கள் வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்த சிகிச்சை வழங்குவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வெயில் அதிகம் உள்ள நேரங்களில் 57 வீடற்றோர் காப்பகங்களில் பொதுமக்கள் தங்கிக் கொள்ளலாம்.

## “வேட்பாளரல்ல; சின்னத்துக்குதான் மக்கள் வாக்களிக்கின்றனர்” சவுமியா அன்புமணி கருத்து

விழுப்புரம், மே.30-
விழுப்புரம் அடுத்த திருவாமாத்தூர் அபிராமேஸ்வரர் கோயிலில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற பசுமை தாயக தலைவரும், தருமபுரி பாமக எம்எல் ஏவுமான சவுமியா அன்புமணி மணமக்களை வாழ்த்தினார்.பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: நீட் தேர்வு மற்றும் மும்மொழிகொள்கை குறித்து பிரதமரிடம் முதல்வர் விஜய் பேசாதது குறித்து கேட்கிறீர்கள். தமிழகத்தின் கோரிக்கைகளை டெல்லிக்கு கொண்டு செல்ல வேண்டும். மேகேதாட்டு அணை தொடர்பாக பாமக கொள்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழகத்தில் நீர் மேலாண்மை குறித்தும் பாமக தலைவர் அன்புமணி தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மழை நீரை சேமித்து விவசாயத்தை செழிக்க வைப்பது எப்படி என்பது குறித்தும் தெரிவித்துள்ளார். இதற்காக சட்டப் பேரவையிலும் குரல் கொடுப்போம், வெளியேயும் குரல் கொடுப்போம். பாமக ஆதரவுடன் வெற்றி பெற்ற அதிமுக எம்எல்ஏ.க்கள் 4 பேர், தவெகவில் இணைந்திருப்பது ஆரோக்கியமான அரசியலா என கேட்கிறீர்கள். இது வரவேற்கத்தக்க விஷயமல்ல, துரதிஷ்டவசமான விஷயம் என அன்புமணி தெரிவித்துள்ளார்.ஒரு வேட்பாளரின் பெயரை வைத்து யாரும் வாக்களிக்கவில்லை. சின்னத்தை வைத்துதான் வாக்களித்துள்ளனர். வெற்றி பெற்ற நபர்கள் அந்த சின்னத்துக்கும், அந்த கட்சிக்கும் உரிய மரியாதையையும், முக்கியத்துவத்தையும் அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஐ.நா. அமைதிப் படையில் உயிர்த் தியாகம் செய்த 2 இந்திய வீரர்களுக்கு உயரிய விருது

நியூயார்க், மே.30-
ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றி உயிர்த்தியாகம் செய்த 2 இந்திய வீரர்களுக்கு உயரிய விருது அறிவிக்கப் பட்டு உள்ளது.கடந்த 1948 ம் ஆண்டில் ஐ.நா. அமைதிப் படை தொடங்கப்பட்டது. ஐ.நா. சபையின் 120 உறுப்பு நாடுகளை சேர்ந்த 97,000 வீரர்கள் அமைதிப் படையில் பணியாற்றி வருகின்றனர். சமீபத்திய புள்ளி விவரத்தின்படி சுமார் 5,000 இந்திய வீரர்கள் ஐ.நா. அமைதிப் படையில் உள்ளனர். உள்நாட்டுப் போரால் பாதிக்கப் பட்டு உள்ள காங்கோவில் ஐ.நா. அமைதிப் படை முகாமிட்டு உள்ளது.

அந்த நாட்டில் பணியாற்றிய இந்திய வீரர் ஹர்பஜன் சிங் அமைதிப் பணியின்போது உயிரிழந்தார். இதேபோல ஐ.நா. அமைதிப் படை சார்பில் தெற்கு சூடானில் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர் சுஜித் குமார் பிரதான் உயிரிழந்தார். ஆண்டு




தோறும் மே 29ம் தேதி ஐ.நா. அமைதிப் படை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தினத்தை முன்னிட்டு ஐ.நா. அமைதிப் படையில் உயிரிழந்த வீரர்களுக்கு “டாக் ஹாம்மார்ஸ்ஜோல்ட் பதக்கம்” என்ற உயரிய விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு ஐ.நா. அமைதிப் படை தினத்தை முன்னிட்டு வீரமரணம் அடைந்த இந்திய வீரர்கள் ஹர்பஜன் சிங், சுஜித் குமார் பிரதான் ஆகியோருக்கு “டாக் ஹாம்மார்ஸ் ஜோல்ட் பதக்கம்” அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்திய பெண் அதிகாரிக்கு விருது ஐ.நா. அமைதிப் படையில் உள்ள இந்திய ராணுவ பெண் அதிகாரி மேஜர் அபிலாஷா பராக், லெபனானில் முகாமிட்டு உள்ளார். அங்கு பெண்களின் பாதுகாப்பு, முன்னேற்றத்துக்காக அவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அவரது சேவையை கவுரவிக்கும் வகையில், “மிலிட்டரி ஜெண்டர் அட்வகேட் ஆப் தி இயர்” விருது அபிலாஷா பராக்குக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. சபையின் தலைமை அலுவலகத்தில் விரைவில் நடைபெற உள்ள விழாவில் இந்தியர்கள் உட்பட 59 பேருக்கு ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அந்தோணியோ குத்தேரஸ் விருதுகளை வழங்க உள்ளார். உயிரிழந்த இந்திய வீரர்கள் சார்பில் அவர்களின் குடும்பத்தினர் விருதுகளை பெற்றுக் கொள்வார்கள்.

## “தேர்தலில் தொகுதி, வேட்பாளர் தேர்வில் காங்கிரஸ் முறைகேடு” ஜோதிமணி குற்றச்சாட்டு

சென்னை, மே.30-
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தொகுதித் தேர்வு மற்றும் வேட்பாளர் தேர்வில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளதாக அக்கட்சியின் மக்களவை உறுப்பினர் ஜோதிமணி குற்றச்சாட்டு வைத்துள்ளார். மேலும், காங்கிரஸ் கட்சிக்குள் செய்யப்பட வேண்டிய தேர்தல் சீர்திருத்தம் தமிழகத்தில் இருந்து தொடங்கட்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தொகுதித் தேர்வு மற்றும் வேட்பாளர் தேர்வில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது. வேட்பாளர்களைத் தேர்வு செய்த பிறகு அதற்குத் தகுந்தது போல தொகுதிகள் கேட்டுப் பெறப்பட்டுள்ளன. சர்வே என்ற பெயரில் மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது.கட்சிக்கு நீண்ட காலம் பணியாற்றியவர்களை,வெற்றி வாய்ப்பு உள்ளவர்களை முற்றிலும்



புறக்கணித்துவிட்டு, புதியவர்கள், வெற்றி வாய்ப்பில்லாத பலருக்கு தொகுதிகள் கேட்டுப்பெறப்பட்டு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிட வாய்ப்பு பெற்ற சிலர் தேர்தல் முடிந்து சில நாட்களுக்குள் கட்சியில் இருந்து விலகுகின்றனர் அல்லது ஒதுங்கிவிட்டனர். இவர்களுக்கெல்லாம் வாய்ப்பு வழங்கியது யார்? எதனடிப்படையில் இவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது? தவறு செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?தொகுதித் தேர்வு மற்றும் வேட்பாளர் தேர்வு குறித்து விசாரணை நடத்தாமல், தேர்தலில் கட்சி விரோத நடவடிக்கைகளை மட்டும் விசாரிக்க கமிட்டி அமைப்பது தவறு செய்தவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான ஒரு ஏற்பாடு மட்டுமே.தொகுதி மற்றும் வேட்பாளர் தேர்வில் ஈடுபட்டது தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையிலான கமிட்டி. அந்தக் கமிட்டி மீதான குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் கட்சியின் விதிமுறைகளின்படி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மட்டுமே விசாரிக்க முடியும். தமிழக காங்கிரஸ் கமிட்டியின் மாநிலப் பொறுப்பாளர்கள் விசாரிக்க முடியாது. காங்கிரஸ் கட்சி உண்மையிலேயே தன்னை சீரமைத்துக் கொள்ள விரும்பினால் தமிழக சட்டமன்ற தேர்தல் தொடர்பான விசாரணையை முறையாக நடத்த வேண்டும். தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கட்சித் தொண்டர்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.பல்வேறு மாநிலத் தேர்தல்களில் தொகுதி மற்றும் வேட்பாளர் தேர்வு தொடர்பாக குற்றச்சாட்டுகள் எழுகிறது. சில நேரங்களில் இதுவும் தோல்விக்கு ஒரு காரணமாக அமைகிறது. ஆனால் விசாரணை செய்வதற்குப் பதிலாக தவறு செய்தவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். தமிழக வேட்பாளர் தேர்வை மிக அருகில் பார்த்தபோது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. இவ்வளவு வெளிப்படையாகத் தவறுகள் நடப்பது கட்சியின் எதிர்காலத்திற்கு மிகப்பெரிய பின்னடைவை அமையும்.இந்த நாட்டை பாஜக, நரேந்திர மோடியிடம் இருந்து காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை காங்கிரஸ் கட்சிக்கு உள்ளது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, எவ்வித சமரசமும் இல்லாமல் போராடி வருகிறார். ஆனால் கட்சிக்குள் நடக்கும் இதுபோன்ற தவறுகள் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் நம்பிக்கையை குலைத்து வருகிறது. நாம் ஒரு வலிமையான எதிர்க்கட்சியாக களத்தில் நின்று போராடி வெற்றிபெற வேண்டுமானால் கட்சிக்குள் தொண்டர்கள் மாவட்ட, வட்டார தலைவர்களின் குரலுக்கு மதிப்பு இருக்க வேண்டும். நேர்மையோடும், வெளிப்படைத் தன்மையோடும் கட்சி செயல்பட வேண்டும். காங்கிரஸ் கட்சிக்குள் செய்யப்பட வேண்டிய தேர்தல் சீர்திருத்தம் தமிழகத்தில் இருந்து துவங்கட்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.தேர்தலுக்கு முன்னதாகவும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் தேர்வில் தனது அதிருப்தியை ஜோதிமணி வெளிப்படுத்தினார். அப்போது அவர், “பேரழிவைத் தடுத்து நிறுத்த நாங்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால், நாங்கள் உண்மையான காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகளை உள்வாங்கி, அவர்கள் எண்ணங்களைப் பிரதிபலித்தோம். அவர்களைக் கைவிட்டு விடவில்லை என்கிற திருப்தி மட்டுமே எஞ்சியுள்ளது” என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.



## அவிநாசியில் ‘ரேவதி ஹெல்த் சிட்டி’ புதிய கிளை அவசர தீவிர சிகிச்சை பிரிவுடன் திறப்பு!

திருப்பூர், மே.30-
திருப்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த 32 வருடங்களாக மிகச்சிறந்த மருத்துவ அனுபவம் கொண்டு விளங்கும் ரேவதி மெடிக்கல் சென்டரின் புதிய கிளை, "ரேவதி ஹெல்த் சிட்டி" என்ற பெயரில் அவிநாசியில் திறந்து வைக்கப்பட்டது.

அவிநாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களின் அவசரத் தேவைகளுக்காக உயர்தர அவசர தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் பலதுறை வெளிநோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பல்வேறு நவீன மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வசதிகளுடன் இப்புதிய கிளை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இத்திறப்பு விழா நிகழ்விற்குப் பிரபல மருத்துவர் டாக்டர் ஈஸ்வரமூர்த்தி தலைமை தாங்கினார். டாக்டர் முருகானந்தம் முன்னிலை வகிக்க, டாக்டர் விஷ்ணு ராகவ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இப்புதிய கிளை மருத்துவமனையினை டாக்டர் சிகாமணி முறைப்படி திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். பல்வேறு துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களின் அர்ப்பணிப்போடு கூடிய மருத்துவச் சேவைகள் இனி அவிநாசி கிளையிலும் தங்கு தடையின்றிக் கிடைக்கும் என நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் திருப்பூரின் முக்கியப் பிரமுகர்கள், முன்னணி மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ சீரான குடிநீர்.. தரம் பிரிக்கும் குப்பைகள்! திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம். மாநகராட்சியின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பொதுமக்களிடம் இருந்து வீடுகளிலேயே மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்து சேகரிப்பதை தீவிரப்படுத்துவது குறித்தும், கோடை காலத்தில் பொதுமக்களுக்கு எவ்வித தடையுமின்றி சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துவது குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது, துணை ஆணையாளர்கள் சுந்தரராஜன், சு. சித்ரா, மாநகர நல அலுவலர் மரு. மோகன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## அலங்காநல்லூரில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம்

அலங்காநல்லூர், மே.30-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப்விஜய், உத்தரவின் பேரில் மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விஜய் அன்பன் கல்லானை, ஆலோசனையின் பேரில் புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா, தலைமையிலும் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், முன்னிலையிலும், தொழிலதிபர் லெட்சுமி, ஏற்பாட்டில் 200மேற்பட்ட பொதுமக்களுக்கு அசைவ உணவு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் நிர்வாகிகள் கல்லணை கிளை நிர்வாகி போவாஸ், மோகன், கண்ணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## “மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே.சிவகுமார் தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்” அமைச்சர் நிர்மல்குமார்



சென்னை, மே.30-
“மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம். மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே. சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்” என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு விரைவில் நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். போக்சோ குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை பெற்றுத் தரப்படும். கோவை வழக்கில் துரிதமாக செயல்பட்டு, ஒவ்வொரு நாளும் அப்டேட் கொடுத்துள்ளோம்.

மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவின் டி.கே. சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார். சர்ச்சை ஏற்படுத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். மேகேதாட்டுவில் கர்நாடகா அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம்.இரு மாநில மக்களுக்கு இடையில் நிறைய தொழில் உறவுகள் உள்ளன. சட்டப்பூர்வமாக மட்டுமே அவர்கள் செயல்பட வேண்டும். டி.கே. சிவகுமார் தன்னிச்சையாக பொறுப்புணர்வு இல்லாமல் செயல்படுவதற்கு கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்” இவ்வாறு அவர் கூறியுள்ளார்

## வெறும் 80 ரூபாயில் கார் பயணம்; 24 மணி நேர சேவை!” திருப்பூரில் அசத்தும் ஜேகே கால் டாக்ஸி




திருப்பூர், மே.30-
திருப்பூர் கருப்பகவுண்டம்பாளையத்தில் "ஜேகே கால் டாக்ஸி" (JK Call Taxi) நிறுவனத்தின் புதிய அறிமுக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா குறித்து டாக்ஸி நிறுவனத்தின் நிறுவனர் போலீஸ் கார்த்திக் செய்தியாளர்களிடம் கூறுகையில், திருப்பூர் பொதுமக்கள் வெறும் 80 ரூபாய் ஆரம்பக் கட்டணத்தில் காரில் பயணிப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், இந்த வாடகை கார் சேவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நாள் முழுவதும் (24 மணி நேரமும்) தங்கு தடையின்றிச் செயல்படும் என்றும், வாடிக்கையாளர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் விரைவில் இதற்கெனத் தனியாக மொபைல் ஆப் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தத் துவக்க விழாவில் பல்வேறு அரசியல் கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் தொழிலதிபர்கள் எனப் பலர் பெருந்திரளாகப் பங்கேற்று வாழ்த்தினர். தொடர்பு எண்கள்:*ஜேகே கால் டாக்ஸி சேவையைப் பெற விரும்பும் பொதுமக்கள் 0421 4433435 மற்றும் 96778 85027 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சேலம் சண்முக நகரில் மதுர காளியம்மன், மதுரை வீரன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் கோலாகலம்

சேலம், மே.30-
சேலம் மாவட்டம், சண்முக நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ மதுர காளியம்மன், ஸ்ரீ மதுரை வீரன் மற்றும் பரிவார தேவதைகள் திருக்கோயில்களின் புனரவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக விழா விமரிசையாக நடைபெற்றது.கோபுர விமானங்களுக்கும், ஸ்ரீ விநாயகர், கருப்புசாமி, ஆஞ்சநேயர், நவகிரகங்கள், நாகர், மீனாட்சி சுந்தரேஸ்வரர், பைரவர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், சிவ துர்க்கை, சண்டிகேஸ்வரர், வாராகி, அறுபடை முருகன் முதலான சகல தேவதா பரிவார தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆன்மீகப் பெருவிழா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, தேவஸ்தான டிரஸ்ட்யார் கமிட்டியார் மற்றும் ஸ்ரீ திருமகள் இளைஞர் நண்பர்கள் குழுவினரின் சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதான விருந்தும் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான அனைத்து சிறப்பான ஏற்பாடுகளையும் தேவஸ்தான டிரஸ்ட்டியார்கள், தேவஸ்தான நிர்வாக கமிட்டியர்கள், ஆலோசகர்கள் மற்றும் தேவஸ்தான கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.



■ திருப்பூர் மாவட்டம் அவினாசி அருகே உள்ள திருமுருகன் பூண்டி, ராக்கியாபாளையம் பகுதியில் உள்ள ஜிஜேவி. நக்ஷத்ரா அவென்யூ குடியிருப்பு பகுதியில், கோவில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. அதில் ஒரு பகுதியாக அவென்யூவில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்பு வாசிகள் இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் பல்வேறு மரக்கன்றுகள் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைவரும் குடும்பத்தோடு பங்கேற்றனர்.



## தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி, மே.30-
தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் 2026 2027 ஆம் ஆண்டில் மே மாதம் வரை ஒத்திசைவு செய்யப்பட்ட நெல் 4204 ஹெக்டர், சிறுதானியங்கள் 3305 ஹெக்டர், பயறு வகைகள் 382 ஹெக்டேர் பருத்தி 647 கரும்பு 62 ஹெக்டர், எண்ணெய் வித்து ூ 1201 ஹெக்டேர், பழங்கள் 9 ஹெக்டேர், காய்கறிகள் 271 ஹெக்டேர், மலைப்பயிர்கள் 2 ஹெக்டேர், பூக்கள் 11 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரங்கள் குறித்தும், பி,எம்,கிசான் திட்ட செறிவூட்டல் முகாம் ஜூன் 15 வரை நடைபெறவிருப்பது குறித்தும், பி,எம்,கிசான் திட்ட பயனாளிகளுக்கு வருடாந்திட மீரிசீசி செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து, இன்றைய தினம் பெறப்பட்ட 139 மனுக்களுக்கு 10 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் முனைவர்.ரா. ராஜ் மோகன்.இ.ஆ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயசந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. தண்டபாணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நரசிம்மன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால்.இ.ஆ.ப., வேளாண் இணை இயக்குநர் செல்வி. தனலட்சுமி, மாவட்ட ஆட்சி யரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகம்மாள், நுகர் பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் வெங்கடலெட்சுமி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், விவசாய பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ திசையன்விளை அருகே உள்ள இடையன்குடி சிசிஎம் மேல்நிலைப் பள்ளியில், பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 500 க்கு 488 மதிப்பெண்கள் எடுத்து முதலிடம் பிடித்த திசையன்விளையைச் சார்ந்த சுரேஷ்குமார் மகள் எஸ்.காவிய தர்ஷினிக்கு பள்ளி தாளாளர் சேகர் பொன்னாடை அணிவித்து பண பரிசு வழங்கி கௌரவித்தார்.



## ராஜாக்கள்பட்டியில் தவெக உலக பட்டினி தினத்தை முன்னிட்டு 200 பேருக்கு அசைவ அன்னதானம்

அலங்காநல்லூர், மே.30-
மதுரை மாவட்டம் பாலமேடு அருகில் உள்ள ராஜாக்கள்பட்டி கிராமத்தில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமானஜோசப்விஜய், உத்தரவின் பேரில் மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விஜய் அன்பன் கல்லானை, ஆலோசனையின் பேரிலும் புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா, தலைமையிலும், ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், முன்னிலையிலும், வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகர், ஏற்பாட்டில் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அசைவ உணவு அன்னதானம் வழங்கப்பட்டது.இதில் வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்தி, பாலமேடு பேரூர் செயலாளர் புகழ், அலங்காநல்லூர் பேரூர்செயலாளர் தளபதிரஞ்சித்,இணைச் செயலாளர் ராமநாதன் ராஜாக்கள்பட்டி கிளைச் செயலாளர் வடிவேல், மறவபட்டி கிளைச் செயலாளர் ராஜா, வலையபட்டி கிளைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் நடராஜன், மேட்டுப்பட்டி ராஜா,மற்றும் கண்ணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.




## பருவமழை காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை

சென்னை, மே.30-
பருவமழை காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்க கூடுதல் பணியாளர்களை பணியமர்த்த TANDEDசிளி மேலாண்மை இயக்குனர் சில நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 6 பெரு வரை கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். கூடுதல் பணியாளர்களின் பணிநியமனம், கணக்குப்பதிவு மற்றும் செலவின விவரங்களை முறையாக பராமரிக்க அறிவுறுத்தல் செய்யப்படவுள்ளது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000